# <u>பத்திரிகைச் செய்தி</u>

## மனை வரன்முறை உத்தரவினை வழங்க ரூ.5000/-ம் லஞ்சம் வாங்கிய வட்டார வளர்ச்சி அலுவலக உதவியாளர் அவர்கள் கைது

புகார்தாரர் திருவள்ளூர் மாவட்டம் PP.10, M.S.Smart City, வெள்ளவேடு, நேமம், என்ற முகவரியை சேர்ந்த திரு. R.சுனில் குமார்,வ/55, த/பெ.K.C.ராஜேஷ்வரன், என்பவர் மேற்கண்ட முகவரியில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். கடந்த 2013-ம் வருடம் திருவள்ளூர் மாவட்டம் கைவண்டூர் கிராமத்தில் அமைக்கப்பட்ட அன்னைநகர் மனைபிரிவில் 1200 சதுரடியுள்ள மனையை தனது மனைவி பிந்து பெயரில் வாங்கி மனையை வரன்முறை செய்து கொடுப்பதற்கான பூண்டி BDO அலுவலகம் சென்று கடந்த 22.12.2023-ம் தேதியன்று தனது மனைவி பெயரில் மனு கொடுத்ததாகவும்,. மனையை வரன்முறைசெய்து கொடுப்பதற்கான வேலைகளை உதவியாளர் விஜயகுமார் அவர்கள் கவனித்து வந்துள்ளார். உதவியாளராக பணிபுரியும் திரு.விஜயகுமார், அவர்களை 10.06.2024-ம் தேதி சென்று பார்த்தபோது வரன் முறை செய்வதற்கான கோப்பினை தயார் செய்துவிட்டதாகவும், வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கையொப்பம் பெற்று தருவதாகவும், அதற்காக அவருக்கு தனியாக ரூ.5000/-ம் கொடுத்தால் உடனடியாக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கையொப்பம் பெற்று வரன்முறை உத்தரவை வழங்குவதாக தெரிவித்தார். புகார்தாரர் மீண்டும் 11.06.2024-ம் தேதி பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சென்று உதவியாளர் திரு.விஜயகுமார் அவர்களை நேரில் சந்தித்து தனது மனு சம்மந்தமாக கேட்ட போது, அவர் அது சம்மந்தமான பைலை தயார் செய்துவிட்டதாகவும், லஞ்சமாக ரூ.5000/-ம் கொடுத்தால் உடனடியாக மனை வரன்முறை உத்தரவினை வழங்க ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார். மேலும் பணத்தை கொண்டுவந்து நாளை அலுவலகத்தில் தன்னை சந்தித்தது கொடுக்குமாறு கறாராக கூறி அனுப்பியதின் பேரில், புகார்தாரர் 11.06.2024 அன்று திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, அலுவலகத்தை அனுகி அளித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து இன்று 12.06.2024ம் தேதி மேற்படி தொகை ரூ5,000/-த்தை புகார்தாரரிடம் திரு.விஜயகுமார், உதவியாளர் அவர்கள் லஞ்சமாக கேட்டு பெற்றுக்கொண்ட போது திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பொறி வைப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டார்.